செ.வெ.எண்:40 நாள்:12.08.2017

**திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு பொது மருத்துவமனையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.வீ.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

---

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு பொது மருத்துமனையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திப்நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (12.08.2017) ஆய்வு மேற்கொண்டார்கள்.

சங்கரன்கோவில் அரசு பொது மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவு, குழந்தைகள் மருத்துவ பிரிவு, ஆண்கள் மருத்துவ பிரிவு, பெண்கள் மருத்துவ பிரிவு, மகப்பேறு வார்டு, அம்மா காப்பீட்டுத்திட்ட வார்டு உள்ளிட்ட பகுதிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மேலும் அங்கு நோயாளிகளுக்கு ஆறுதல் கூறினார். அங்கு மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய வசதிகள் குறித்து அலுவலர்களிடம் ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் நோயாளிகளுக்கு உணவு தயார் செய்யும் உணவுக்கூடத்திற்கு சென்று உணவுகள் தரமாக, சுத்தமாக சமைக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார். மேலும் காய்ச்சல் பாதிப்பு உள்ள நோயாளிகள் பிரிவுக்கு சென்று பார்வையிட்டார். தொடர்ந்து மருத்துவ அலுவலர்களிடம் இம்மருத்துவமனை மேம்பாட்டிற்கு என்னென்ன வசதிகள் தேவை என்பதை தெரிவிக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர்களிடம் பேசி இதற்கான அனுமதியை பெற்றுத்தரப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது இணை இயக்குநர் பொதுசுகாதாரம் மரு.இளங்கோவன், துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.சோமசுந்தரம், அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.சுதா, சங்கரன்கோவில் நகராட்சி பொறியாளர் திரு.அப்துல்காதர், டான்பெட் துணைத்தலைவர், திரு.கண்ணன் என்ற ராஜு, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்கத்தலைவர், திரு. பி.ஆறுமுகம், முன்னாள் எம்எல்ஏ திரு.சுப்பையா பாண்டியன், முக்கிய பிரமுகர் திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**